**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். MC 3 /2022**
**வழக்கு சாட்சி. எ.ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ரமேஷ்குமார் | **வயது** | : | 42 /2026 |
| **தந்தை பெயர்** | : | பசுபதி | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Both side Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 09.02.2026**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கும், மனுதாரருக்கும் ஏப்ரல் 27, 2018 இல் திருமணம் அறந்தாங்கி TNS திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திருமண மண்டப மற்றும் உணவு செலவுகளில் மனுதாரர் தரப்பில் செலவு செய்யப்பட்டது என்று சொன்னால், பாதிப்பாதி செலவு செய்யப்பட்டது. மேற்படி திருமணச்செலவுகள் எவ்வளவு ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது எனது தகப்பனாருக்கு தான் தெரியும். நான் பொய் சொல்கிறேன் என்றும் அதனால் தான் திருமணத்திற்கு எவ்வளவு செலவானது என்று எனக்கு தெரியவில்லை என்று சொன்னால், சரியல்ல. திருமணத்தின் போது எனக்கு 10 பவுனும், மனுதாரருக்கு 35 பவுன் நகையும் போடப்பட்டது என்று சொன்னால், சரிதான் ஆனால் எனக்கு 8 பவுன் போடப்பட்டது. மனுதாரருக்கு போடப்பட்டது 35 பவுன் மனுதாரர் வசமும், எனக்கு அணிவிக்கப்பட்ட 10 பவுன் நகை என்னிடம் உள்ளது என்று சொன்னால், சரிதான் ஆனால் எனக்கு அணிவிக்கப்பட்ட 8 பவுன் நகை தான் என்னிடம் உள்ளது.

2. நான் பொய் சொல்கிறேன் என்றும் 10 பவுன் நகை தான் எனக்கு கொடுத்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. மனுதாரரரின் உறவினர்கள் எனக்கு செய்த இரண்டறை பவுன் நகை என்னிடம் உள்ளது என்றால், சரியல்ல. அவர்கள் வாங்கிவிட்டு சென்றுவிட்டார்கள். இரண்டறை பவுன் நகையை யார் வாங்கினார்கள் என்று சொன்னால், பஞ்சாயத்து பேசி வாங்கினார்கள். பஞ்சாயத்து பேசியது யார் என்றால், மனுதாரரின் தாய்மாமா பேசி நகையை வாங்கி சென்றுவிட்டார். நான் பொய் சொல்கிறேன் என்றும் அந்த இரண்டறை பவுன் நகை என்னிடம் தான் உள்ளது என்றால், சரியல்ல. திருமணத்திற்கு சீர்வரிசையாக நான்கரை கிலோ வெள்ளி மற்றும் இதர சீர்வரிசை சாமான்கள் என்னிடம் தான் உள்ளது என்றால், சரியல்ல மனுதாரர் தகப்பனார் எனது தகப்பனாருக்கு எழுதி கொடுத்தபடி என்னிடம் உள்ளது.

3. மேற்படி எழுதி கொடுத்த ஆவணத்தை எனது முதல் விசாரணையுடன்

தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். திருமணம் 45 நாள்கள் நானும், மனுதாரரும் சந்தோசமாக இருந்தோம் என்றால், சரிதான். நான் வெளிநாட்டிற்கு செல்லும் போது மனுதாரர் என் வீட்டில் தான் இருந்தார் என்று சொன்னால், சரியல்ல. மனுதாரர் கர்பிணியாக இருந்ததால் எனது மாமியார் வீட்டிலேயே விட்டு விட்டேன். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் 2 ஆவது பக்கத்தில் 4 வது பாராவில் 5 ஆவது வரியில் குவைத் நாட்டில் இருந்து திரும்பி வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் அதன் தேதி என்ன என்றால், ஜீலை 31, 2018 ஆம் தேதி. நான் சொல்லும் பஞ்சாயத்து நடந்த தேதி என்னவென்றால், அது எனக்கு ஞாபகம் இல்லை. பஞ்சாயத்து யார் வீட்டில் நடந்தது என்ற விவரம் எனக்கும் தெரியமா என்றால், தெரியும் TNS தேவர் வீட்டில் பஞ்சாயத்து நடந்தது. நான் சொல்லும் பஞ்சாயத்தில் யார் எல்லாம் கலந்து கொண்டார்கள் என்று சொன்னால், எனது தகப்பனார், எனது இரண்டு தாய்மாமாக்கள் கலந்து கொண்டனர்.

4. மேற்படி பஞ்சாயத்தில் நேரடியாக என்னை விசாரணை செய்யவில்லை போன் மூலமாக தான் விசாரணை செய்தார்கள். என்னை எந்த சமயத்திலும் நேரடியாக பஞ்சாயத்தில் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். அந்த பஞ்சாயத்து என்னென்ன தேதிகளில் நடைபெற்றது என்று சொன்னால், எனக்கு ஞாபகம் இல்லை. நான் எத்தனை பஞ்சாயத்துகளில் நேரடியாக கலந்து கொண்டேன் என்று சொன்னால், ஒரு பஞ்சாயத்திலும் நான் நேரடியாக கலந்து கொள்ளவில்லை. பஞ்சாயத்து நடைபெற்ற சமயத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் தாலி பெருக்கி போடப்படும் நிகழ்வில் எனது தாயார், எனது உறவினர்கள் இருந்தார்கள். தாலி பெருக்கி போடப்பட்ட நிகழ்வு கல்யாணம் முடிந்து 3 மாதம் கழித்து தான் நடைபெற்றது என்றால், சரிதான். மூன்று மாதம் மனுதாரர் என் வீட்டில் இருந்தார் என்றால், சரியல்ல. அவரது வீட்டில் இருந்தார். நான் பொய் சொல்கிறேன் என்றும், மனுதாரர் மூன்று மாதங்களுக்கு மேலாகவும் என் வீட்டில் தான் இருந்தார் என்றால், சரியல்ல.

5. திருமணமான ஐந்தாவது மாதத்தில் கர்ப்பிணி காலக்கட்டத்தில் மருந்து கொடுக்கும் சுப நிகழ்ச்சியில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்று சொன்னால், எனது அப்பா, அம்மா கலந்து கொண்டனர். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 2 முதல் 8 பக்கம் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால், சரியல்ல. நான் எந்த டீக்கடையில் வேலை பார்த்து வருகிறேன் என்று சொன்னால், நான் டீக்கடையில் வேலை பார்க்கவில்லை டீ கார்னரில் வேலை பார்த்து வருகிறேன். தற்சமயம் சாட்சி மீண்டும் டீக்கடை என்று சொல்கிறார். நான் டீக்கடை எங்கு வைத்திருந்தேன் என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள டீக்கடை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் நான் வேலை பார்த்து வருவதற்கு எவ்வித குறிப்புகளும் இல்லை என்று சொன்னால், சரிதான். அது உரிமையாளர் பெயரில் உள்ள ஆவணம்.

6. என்னிடம் காட்டப்படும் நான் Kantha பால் நிறுவனம் நடத்தி வருவதற்காக ஆவணம் என்று சொன்னால், சரிதான் ஆனால் அந்த ஆவணத்தின் படி உரிமையாளர் வேறு ஒரு நபர். மேற்படி ஆவணத்தின் **பதிவிறக்க நகல் ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார் மேற்படி ஆட்சேபணை இறுதியில் தீர்மானிக்கப்படும் என்று குறியீடு செய்யப்படுகிறது) மேற்படி ஆட்சேபணை நான் அந்த கடையின் மேனேஜ்ங் செய்து வருவதால் எனது விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பொய் சொல்கிறேன் என்றும், அந்த ஆவணத்தில் எனது தொலைபேசி எண், மற்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். மேற்படி Kantha பால் ஏஜென்சிக்கு நான் 12 லட்சம் உரிமத்தொகையாக

செலுத்தியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நான் அங்கு பணியாளராக தான் வேலை பார்த்து வருகிறேன்.

7. நான் Kantha பால் ஏஜென்சியை சொந்தமாக வாகனம் வைத்து நிர்வகித்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவகாரத்து வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது குழந்தை பிறந்ததில் இருந்து ஒரு முறையாவது நான் பார்த்துள்ளேனா என்றால், அருகில் இருந்து பார்த்ததில்லை. நான் குழந்தையை பார்ப்பதற்கு சட்டப்பூர்வ நடவடிக்கை எடுத்தேனா என்றால், இல்லை. நான் குழந்தையை பார்ப்பதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. எனக்கு மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க போதிய வசதி இருக்கு என்று சொன்னால், சரியல்ல. ஜீவனாம்சம் கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் எதிர் உரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**